## ஐ.நா.மனித உரிமைகள் பேரவை 54 ஆவது கூட்டத்தொடர்

# பிரித்தானியா தலைமையில் இணை அனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பாக ஆராயும் நோக்கில் மெய்நிகர் சந்திப்பு



பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கையின் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் இவ்வாரம் நடைபெறவுள்ள சந்திப்பில், இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக்கூட்டத் தொடர் குறித்த ஒழுங்கமைப்புக் கூட்டம் இன்று ஜெனிவாவில் இடம் பெறுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வின் ஆரம்ப நாளான செப்டெம்பர் 11 ஆம் திகதி, ஏற்கனவே இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51 கீழ்1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் நடைமுறையாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து, இலங்கை தொடர்பான கலந்துரையாடலொன்றும் நடைபெறும்.

இவ்வாறானதொரு பின்னணியில், பிரித்தானியா தலைமையிலான அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, வட மெசிடோனியா, மாலாவி மற்றும் மொன்ரனேக்ரோ ஆகிய இணை அனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் ஆராயும் நோக்கில், எதிர்வரும் வாரம் மெய்நிகர் முறைமையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளன.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 09 திங்கட்கிழமை 28.08.2023 கதிர் 59

## கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளை கொள்ளையிட்டோர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மடக்கிப் பிடிப்பு



யாழ் மாவட்டத்தில் இரவில் கத்தியை காட்டி மிரட்டி நகைகளை கொள்ளையடித்த கும்பல் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டதோடு, திருடப்பட்ட 30 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் இரவு வேளைகளில் கூரையினை பிரித்து 2 ▶

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மஹோற்சவ தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதிகாலை தேர்த் திருவிழாவுக்கான கிரியைகள் ஆரம்பமாகி காலை 7.30 அளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து துர்க்கையம்மன் சித்திரத் தேரில் எழுந்தருளினார்.

நாளை செவ்வாய்க்கிழமை துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில், காலை துர்க்கை அம்பாளின் தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளன. (01, க)

## திருகோணமலை பெரியகுளத்தில் பிக்குகளின் போராட்டத்தையடுத்து விகாரை கட்ட அனுமதியளிப்பு!



திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் இடைநிறுத்தப் பட்டிருந்த பொரலுகன்ன புராதன ரஜமகா விகாரையின் கட்டுமானப் பணிகளை மீள தொடர்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பொரலுகன்ன புராதன ரஜமகா விகாரையின் கட்டுமானப்பணிகளுக்கு கடந்த ஜூலை 9 ஆம் திகதி நகர மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பி.தினேஸ்வரன் தற்காலிகமாக தடை விதித்திருந்தார்.

இந்த நிலையில் இன்று முன்னெடுக்கப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் விகாரையின் கட்டுமானப் 2 ▶

## முழு நாட்டையும் தாயகமென கருதுங்கள் தமிழரிடம் குணவங்ச தேரர் கோரிக்கை



வடக்கு, கிழக்கை மட்டுமல்ல முழு இலங்கையும் எமது தாயகம்தான் எனக் கருதி, இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

நாட்டு வளங்களை பாதுகாப்பதற்கான போராட்டமே இரண்டாவது சுதந்திர போராட்டமாகும். வடக்கு, கிழக்கு தமது தாயகம் என தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கூறுகின்றனர். இவர்கள் ஏன் இரு பகுதிகளை மட்டும் தாயகமாக கருத வேண்டும்? முழு நாடும் எமது தாயகம் என கருதுங்கள். நாம் அனைவரும் இலங்கையர்கள்.

யாழ். நாகதீபம் எமது பகுதி 2 ▶

## யாழில் வறட்சியினால் 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன!

யாழ்ப்பாண மாவட்டத்தில் 70,408 நபர்களைக் கொண்ட 22,044 குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, சங்கானை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுகளில் குடிநீர்ப் பற்றாக்குறையான பகுதிகளுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி உதவியுடன் பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும் 2 ▶

## பளையிலுள்ள காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்க சிறீதரன் எம்.பி ஆளுநருக்குக் கோரிக்கைக் கடிதம்



கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் ஒரு பகுதியையேனும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது விடயமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் இன்றையதினம் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள 2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையில் 4 வீதமானோர் டிமென்டியா நோயால் பாதிப்பு

இலங்கையின் மக்கள்தொகையில் 4 வீதமானவர்கள் நினைவு இழப்பு எனப்படும் டிமென்டியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர் என் குமாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

வயோதிபத்துடன் மூளை செல்கள் அழிவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தகவல் வழங்கிய போதே அவர் இந்த விடயத்தை வெளியிட்டுள்ளார்.

முறையான உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமும், தொடர்ந்து உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்த நிலைமையை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (04)

## 14 தங்க பிஸ்கட்டுகளை கடத்திவந்த வர்த்தகர் கட்டுநாயக்கவில் கைது!

தாய்லாந்திலிருந்து இரண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபா பெறுமதியான 14 தங்க பிஸ்கட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் நேற்றைய-தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளை மாபொல பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை 3.45 மணியளவில் தாய்லாந்தின் பேங்கொக்கிலிருந்து ஸ்ரீலங்கன் எய-ார்லைன்ஸ் விமானமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் அவர் கொண்டு வந்திருந்த பயணப் பைகளை சோதனையிட்டபோ-தே 14 தங்க பிஸ்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த)

## பளையிலுள்ள காணிகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல் ஆர் சி காணிகளுள் ஒருபகுதியை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் காணியற்ற நிலையில் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, தாங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் என்னால் தொடர் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி காணிகள் தென்னிலங்கையின் தொழிலதிபர்களுக்கும், எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் நோக்கோடு இயங்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கும் பகுதி பகுதியாகக் கூறுபோடப்படுவதை, கையாலாகாத்தனத்தோடு பார்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தர்மக்கேணிப் பகுதியிலுள்ள 120 ஏக்கர் எல் ஆர் சி காணி, புத்தளத்தைத் தளமாகக் கொண்ட ஓர் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு, அக்காணியின் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது.

போரினாலும், இடப்பெயர்வுகளாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு இந்த மண்ணிலே மீளவும் குடி-யேறி, தமக்கென்றொரு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சொந்தக் காணியற்ற நிலையில் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும், காணிகளிலும் வாழவேண்டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்க்கதியற்றிருக்கத்தக்கதாக, அரச காணிகளை தனவந்தர்களுக்கும், இந்த மாகாணத்தோடு எந்தத் தொடர்புகளுமற்றவர்களுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பதென்பது, அல்லலுறும் எமது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகச்செயலாகவே அமையும் என்பதில் தாங்களும் கரிசனம் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இது தவிர, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, எமது மக்களின் பூர்வீக நிலங்கள் மெல்லமெல்ல பறிபோகும் அபாயகரமான நடைமுறைச் சூழலொன்றின் பின்னணியில், நீண்டகாலமாக வெற்றுக் காணிகளாக உள்ள பச்சிலைப்பள்ளியின் எல் ஆர் சி காணிகளுக்கும் அதேகதி ஏற்படாது என்பதற்கு எம்மிடம் எதுவித உத்தரவாதமும் இல்லாத நிலையில், குறித்த காணிகளின் ஒரு பகுதியையேனும் காணியற்ற எமது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் இருப்பை நிலைநிறுத்துவதற்கு ஆவனசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன், என்றும் நாடா-ளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

## முழு நாட்டையும் தாயகமென ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாம் உரிமை கோரவில்லையா? அதுபோல தமிழ் மக்களும் முழு இலங்கையும் தமக்கானது என எண்ண வேண்டும்.

இன்று எமது நாட்டு வளங்கள் சுரண்டப்படுகின்றன. தேசிய சொத்துகள் விற்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே வாடகைக்காரர்கள் போல் வாழ வேண்டிய நிலைமை. இந்த நிலைமை மாற வேண்டும்.

இந்த நாடு எமது உரிமை. அதற்கு நாம் சொந்தக்காரர்கள் என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு வர வேண்டும். அப்போதுதான் எமது மரபுரிமைகளைக் காக்கலாம். வளங்களைக் காப்பதற்கான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும்.

அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொல்பொருள் என்பது ஓர் இனத்துக்குரியது அல்ல. ஒரு பழமையான ஆலயம் இருந்தால் அதனையும் அனைவரும் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருட்களை பாதுகாக்குமாறு தமிழ் மக்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 75 ஆண்டுகளாக தமிழரோ, சிங்களவர்களோ வெற்றிபெறவில்லை. மாறாக கலவர பூமியில் தான் மோதிக்கொண்டோம். வடக்கிலும், தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்குள் சிக்கிவிட வேண்டாம். இலங்கையர் என்ற முறையில் நாம் அனைவரும் பிரதேச இனவாதமின்றி இந்நாட்டை கட்டியெழுப்புவோம், எனவும் அவர் கூறியுள்ளார்.

## திருகோணமலை பெரியகுளத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை தொடர்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாவட்ட செயலாளர், அரசியல் தலைவர்கள் மற்றும் விகாராதிபதி தலைமையிலான மதத் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் அண்மையில் நாடாளுமன்றில் துறைசார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் எழுப்பியிருந்த கேள்வி ஒன்றின்போது, விகாரை அமைக்கும் பணியை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என்பதுடன் இது ஆளுநரின் தனிப்பட்ட தீர்மானமே என பதிலளித்திருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (க)

## கத்தியைக் காட்டி மிரட்டி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்குள் இறங்கி வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி கத்தியை காட்டி, நகைகளை கொள்ளை அடித்து செல்லும் சம்பவங்கள் தொடர்பாக அந்தந்த பொலிஸ் நிலையங்களில் ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் வழிகாட்டுதலில், யாழ் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜகத் விஷாந்தவிற்கு கீழ் இயங்கும் யாழ் மாவட்ட குற்றதடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெரோல் அவர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ. மேனன், உப பொலிஸ்பரிசோதகர் பிரதீப் ஆகியோரின் கீழ் கவியரசன் ஜெயந்தன், கரன், சுஜந்தன், ஜோசப், சம்பத் அறுகம், பெண் கொன்ஸ்டபிள் இரந்திகா ஆகியோர் அடங்கிய அணியினரால் குறித்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து சங்கிலியன் வீதிப் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட 24 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளதோடு, இணுவில் பகுதியில் திருடப்பட்ட நான்கு பவுண் நகையும் திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள், வாள் மற்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நல்லூர் பின் வீதியால் செல்லும் வயது முதிர்ந்தவர்களை மிரட்டி கைத்தொலைபேசிகளையும் சிறிய தொகைப் பணத்தையும் திருடும் சம்பவங்களிலும் குறித்த சந்தேக நபர்கள் ஈடுபட்டிருந்தமை கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (01, த)

## பிரித்தானியா தலைமையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொள்ளவிருப்பதோடு, இதில் பங்கேற்பதற்கு மேலும் சில சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது, இலங்கையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அதற்கு எதிர்மறையான சூழ்நிலையொன்று அரசாங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக இணை அனுசரணை நாடுகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்துவதில் நிலவும் காலதாமதம் மற்றும், வட கிழக்கு மாகாணங்களில் தொடரும் நில அபகரிப்பு, குருந்தூர் மலை, தையிட்டி உள்ளிட்ட பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்பன உள்ளடங்கலாக அண்மைய காலங்களில் நாட்டில் இடம்பெறும் அடக்குமுறைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிராமிய உற்பத்திப்பொருட்களை ஊக்குவிக்கும் கண்காட்சியும் விற்பனையும் சம்மாந்துறையில்

(நூருல் ஹுதா உமர்)

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டுத் திட்டப்பிரிவு இணைந்து கிராமத்தில் வேலையற்ற இளைஞர்களினூடாக உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டு திட்டப்பிரிவு ஆகியவற்றின் நிதியனுசரணையில், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் செயற்படுத்தலின் கீழ், கிராமிய உற்பத்திகளை பொதியிடலும், கிராமிய உற்பத்திகளு-க்கான கண்காட்சியும் சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் இன்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் கௌரவ அதிதியாக பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிகா, நிஸ்கோ பணிப்பாளர் எஸ். சிறிவர்த்தன, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி யூ.எல். முபாரக் அலி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது கிராமிய இளைஞர் உற்பத்திகளைப் பொதியிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் 23 இளைஞர்களினால் செய்யப்பட்ட சூழல் நேயமிக்க உற்பத்திப்பொருட்களும் உலர் உணவுப் பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்து எட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், பல நாடுகளில் சமூக மற்றும் சமய சேவைகளைச் செய்துவரும் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்களைக் கௌரவித்தலும் இடம்பெற்றது.




## கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக யூ. எல். றியால் இன்று பொறுப்பேற்றார்



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலய, கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் தமிழ் பாட உதவிக் கல்வி பணிப்பாளர் யூ.எல். றியால் இன்று கல்முனை கோட்டக்கல்வி பணிமனையில் வைத்து, முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ் அவர்களிடமிருந்து தமது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களின் தமிழ்ப் பாட உதவிக்கல்வி பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிய இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான றியாலுக்கு, அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களினால் மாலை அணிவித்து அழைத்துவரப்பட்ட முன்னாள், இந்நாள் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு கல்முனை வலயக்கல்வி அலுவலக உயர் அதிகாரிகள் தமது வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர்.



## குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர் குரல் குழுவினரும் கபில்வத்தைக்கு யாத்திரை!

( வி.ரி.சகாதேவராஜா)

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் நாளை செவ்வாய்க்கிழமை காலை ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தைக்கான யாத்திரையை ஆரம்பிக்கவுள்ளனர்.

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான இந்தக் காட்டுவழி யாத்திரை நாளை காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாக உள்ளது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.

செவ்வாய், புதன்கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில் அவர்கள் தங்கியிருந்து வழிபாட்டியற்றவுள்ளனர்.



# வடகொரிய அதிபருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு கொலை முயற்சி நடைபெற்றதாக சந்தேகமாம்

வடகொரியாவில் அடிக்கடி அணு ஆயுத ஏவுகணைகளைச் செலுத்தி சோதனை செய்யப்படுவது வழக்கமாகிவிட்ட நிலையில், இதற்கு அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. எனினும், அதனை கண்டு கொள்ளாமல் தொடர்ந்து அணு ஆயுத ஏவுகணைப் பரிசோதனைகளை வட கொரியா நடத்தி வருகிறது.

அதன் தலைநகர் பியாங்யாங் நகரில் சமீபத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பு ஒன்று, அதிபர் கிம் ஜாங் அன்னை கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி என சந்தேகிக்கப்படுவதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், அதிபர் கிம் ஜாங்கின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவானது. இதற்காக வெளிநாட்டில் இருந்து நவீன சாதனங்கள் இறக்குமதியாகி உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அவரது பாதுகாப்புக் குழுவில் உள்ளவர்களுக்கு கைப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. சந்தேகத்திற்குரிய நடவடிக்கை எதுவும் தெரிய வரும் போது அல்லது துப்பாக்கிச் சூடு எதுவும் நடத் தப்பட்டால், பாதுகாப்புக் குழுவினர் உடனடி யாக அதிபர் கிம் ஜாங்கை பாதுகாக்க தங்களுடைய பைகளை அவரை நோக்கி உயர்த்துவார்கள். அந்தப் பைகள் திறந்து, பாதுகாப்பு கவசம் போன்று கிம் ஜாங்கை சூழ்ந்து கொண்டு பாதுகாப்பை ஏற்படுத்தும்.

தாக்குதல் நடத்தியவர்களை விலக்கி, அதிபருடைய பாதுகாப்பு உறுதியாகும்வரை, பாதுகாப்பு குழுவினர் கிம் ஜாங்கை சுற்றி நின்று அவரை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.



எனினும், கூறப்படுவது போன்று, தலைநகரில் அதுபோன்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எதுவும் நடந்ததுபோல் தெரியவில்லை, என தென்கொரிய உளவு அமைப்புகள் தெரிவிக்கின்றன. இது தொடர்புடைய விடயங்களை பற்றி தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றும் அவை குறிப்பிட்டுள்ளன. (04)

# அவுஸ்திரேலியாவில் ராணுவக் கூட்டுப் பயிற்சி விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் மூவர் பலி!

அமெரிக்கா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கிழக்கு திமோர் ஆகிய நாடுகளுடன் இணைந்து அவுஸ்திரேலியா கூட்டுப்போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரில் உள்ள கடற்கரைக்கு அருகே இந்தப் பயிற்சி நடைபெற்றது.

இதில் சுமார் 2,500 ராணுவ வீரர்கள் கலந்து கொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

இதன்போது, 23 அமெரிக்க கடற்படை வீரர்களை ஏற்றிக்கொண்டு திவி தீவு நோக்கி சென்ற அமெரிக்காவுக்குச் சொந்தமான பெல் போயிங் வி-22 அஸ்ப்ரே என்ற விமானம், விழுந்து நொறுங்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து சுமார் 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மெல்வில் தீவுக்கு அருகே விமானம் சென்று கொண்டிருந்தபோது, திடீரென கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்துள்ளது.

இதனையடுத்து மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டபோது, மெல்வில் தீவில் விமானம் விழுந்து நொறுங்கிக் கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விமான விபத்தில் படுகாயம் அடைந்த ராணுவ வீரர்கள் 23 பேரும், சிகிச்சைக்காக விமானம் மூலம் டார்வின் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில், சிகிச்சை பலனின்றி 3 ராணுவ வீரர்கள் உயிரிழந்துவிட்டதாகவும், மற்ற 20 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



அவுஸ்திரேலியா நாட்டின் பிரதமர் அன்ரனி அல்பா-னீஸ் இந்த விபத்தில் உயிரிழந்த 3 அமெரிக்க ராணுவ வீரர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இது ஒரு துயரமான சம்பவம். இதில் பாதிக்கப்பட்ட ராணுவ வீரர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய எமது அரசாங்கம் உறுதியாக உள்ளது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தையடுத்து இந்தக் கூட்டுப்போர்ப் பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)

# பாடசாலைகளில் மத ரீதியிலான உடை அணிய பிரான்ஸ் அரசு தடை விதிப்பு

பிரான்ஸ் நாட்டில் அரசாங்கப் பாடசாலைகளில் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் என அனைவரும் தங்கள் மதத்தை வெளிப்படுத்தும் வகையிலான ஆடைகள், அடையாளங்களை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலைப்பகுதியை மூடும் உடையான ஹெட்ஸ்கர்ப் உடைக்கு 2004 ஆம் ஆண்டு முதலும், தலை முதல் கால் வரை உடல் முழுவதும் மூடும் இஸ்லாமிய உடையை பொது இடங்களில் அணிய 2010 ஆம் ஆண்டு முதலும் தடை விதிக்கப்பட்டது.


அதேபோல், பிரான்ஸ் பள்ளிக்கூடங்களில் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரான்சில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் இஸ்லாமிய மத உடையான ஹபயாவை அணியை தடை விதிக்கப்பட்டுள்ளது.

வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி அங்கே புதிய பாடசாலை ஆண்டு தொடங்குகிறது. அன்று முதல் இந்தத் தடை அமலுக்கு வரவிருக்கிறது.

பிரான்ஸ் பாடசாலைகளில் ஹபயா ஆடையை அணியும் மாணவிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், அது மதம் சார்ந்த உடை என்பதால் அதை அணியத் தடை விதிக்க வேண்டும் என்றுற அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கப்பட்டது. (04)

# நிலவில் ஆய்வு மேற்கொள்ளும் ஜப்பான் பயணம் ஒத்திவைப்பு



ஜப்பான் நாட்டின் தென்மேற்கே ககோஷிமா மாகாணத்தில் உள்ள தனேகஷிமா விண்வெளி மையத்தில் இருந்து நிலவை ஆய்வு செய்வதற்காக இன்று காலை 9.26 மணியளவில் ஏவ திட்டமிடப்பட்டு இருந்த எச்.2.ஏ. ரொக்கெட் ஏவும் திட்டம் சாதகமற்ற வானிலையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்காக ஜப்பானின் விண்வெளி ஆய்வு மையத்தினால் இந்த நிலவுப் பயணத் திட்டம் உருவாக்கப்பட்டது. லாண்டரை தரையிறக்கும் இந்த நிகழ்வுக்கு ஸ்லிம் என பெயரிடப்பட்டது.

இந்தத் திட்டம் வெற்றி பெற்றால், நிலவை ஆய்வு செய்வதற்கான திட்டத்தில் வெற்றி பெற்ற உலகின் ஐந்தாவது நாடாக ஜப்பான் திகழும்.

ஜப்பானின் இந்த ஆய்வுப் பணிகளில் சேகரிக்கப்படும் தரவுகள், அமெரிக்கா தலைமையிலான ஓர்டெமிஸ் என்ற திட்டத்திற்கு பயன்படுத்தப்படும். இந்த ஓர்டெமிஸ் திட்டத்தின் கீழ் நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்புவது என்ற நோக்கத்தைக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலவின் தென் துருவப் பகுதியை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லாண்டர், கடந்த 23 ஆம் திகதி நிலவில் தரையிறங்குவதில் வெற்றியடைந்தது. அதன் ரோவர் தற்போது ஆய்வுப் பணிகளை தொடங்கி உள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவைத் தொடர்ந்து இந்தச் சாதனையைப் படைத்த நான்காவது நாடாக இந்தியா உருவாகி உள்ளது. எனினும், நிலவின் தென்துருவப் பகுதியில் தரையிறங்கிய உலகின் ஒரே நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. (04)



# மீண்டும் சிம்பாப்வே அதிபரானார் எமர்சன்

சிம்பாப்வே நாட்டில் கடந்த வாரம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. வாக்குச்சீட்டு அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒரு நாளில் நடைபெற வேண்டிய தேர்தல் மேலும் ஒருநாள் நீட்டிக்கப்பட்டு 24 ஆம் திகதி வரை நடந்தது.

இதில் அதிபர் எமர்சன் மங்கக்வாவுக்கும், பிரதான எதிர்க்கட்சி தலைவரான நெல்சன் சமிசாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இந்தத் தேர்தல் முடிவுகள் தற்போது வெளிவந்துள்ள நிலையில், எமர்சன் 52.6 சதவீதம் வாக்குகளை பெற்று மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்க்கட்சி தலைவர் நெல்சன் 44 சதவீதம் வாக்குகளை பெற்றுத் தோல்வியை தழுவுள்ளார்.

எனினும் தேர்தலில் குளறுபடி ஏற்பட்டதாக கருதி, இந்த முடிவினை அங்குள்ள எதிர்க்கட்சிகள் ஏற்க மறுத்துள்ளன. (04)

# ஊழியர் சேமலாப, நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக பயன்படுத்தல்

## யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு





உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேமலாப, நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களைப் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் இன்று திங்கட்கிழமை மதியமளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

அமைச்சரவையில் 2023 ஜுலை முதலாம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் குறித்த நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றிப் பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்த நிதியக் கணக்குகளின் மீது சுமத்தப்படும்போது அனைத்து ஊழியர்களினதும் சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் போகும் அபாயம் உள்ளது.

இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் ஊழியர் சேமலாப, நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுக்கு நிதிரீதியான உடனடிப்பாதிப்பும், நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கப்பெறாத அபாய நிலையும் உள்ளது என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைத்தொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 9 தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்தன. (O1)

# ஹட்டன் பேருந்துத் தரிப்பு நிலையம் திருத்தப் பணிகளால் இடமாற்றம்


ஹட்டன் பேருந்துத் தரிப்பு நிலையத்தில் திருத்தப்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால், குறித்த பகுதி மூடப்படவுள்ளதாக பேருந்து நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தத் திருத்தப் பணிகளின் காரணமாக பேருந்துத் தரிப்பிடங்கள் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளதாகவும் குறித்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய ஹட்டன் பொகவந்தலாவை, மஸ்கெலியா, ஒஸ்போன், நோட்டன், காசல்ரீ, சாஞ்சிமலை, ஒல்டன், போடைஸ் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகள் ஹட்டன் தபால் நிலையம், சுசி ஆடையகம் ஆகிய பகுதிகளில் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹட்டனிலிருந்து கொழும்பு, கண்டி, தலவாக்கலை, வட்டவளை, நாவலப்பிட்டி, நுவரெலியா உட்பட அப்பகுதியில் செல்லும் தனியார் மற்றும் அரச பேருந்துகள் கார்கில்ஸ் புட் சிட்டி அமைந்துள்ள பகுதியில் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆங்கில பேராசிரியரானார் ஏ.எம்.எம். நவாஸ்



(நூருல் ஹுதா உமர்)

பேராசிரியர் ஏ.எம்.எம். நவாஸ், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆங்கிலப் பேராசிரியராவதோடு, பேராசிரியர் ரைஹானா ரஹீமைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களில் இரண்டாவது ஆங்கிலப் பேராசிரியர் என்ற பெருமையையும் பெற்றவராவார்.

1969 ஜுலை மாதம் பிறந்த அப்துல் மஜீட் முகம்மது நவாஸ், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவையால் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் ஆங்கிலப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

1990 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டித் தேர்வில் சிறப்பு தேர்ச்சி பெற்று ஆங்கில ஆசிரியராக தனது கற்பித்தல் பணியை ஆரம்பித்த இவர், 1995 டிசம்பரில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து, அவர் 1996 இல் விவசாய பீடத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

1997 ஏப்ரல் மாதம், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர ஆங்கில பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், 1997 மே மாதம், அதே பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

2005 இல் உறுதிப்படுத்தப்பட்ட விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்ற இவர், சிரேஷ்ட விரிவுரையாளராகவும், 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பதவி உயர்த்தப்பட்டார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2023இல் வெளியிடப்பெற்றது.